RNI-NO: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 191 | ஜூலை.14 2025 திங்கள்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## உத்திரமேரூர் பேரூராட்சியை கண்டித்து ஜூலை 17 அதிமுக ஆர்ப்பாட்டம்

உத்திரமேரூர், ஜூலை.14-

உத்திரமேரூர் பேரூராட்சியை கண்டித்து அதிமுக சார்பில் வரும் ஜூலை 17ம் தேதி ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

இது தொடர்பாக அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் பேரூராட்சியில் சொத்து வரி, குடிநீர் வரி மற்றும் தொழில் வரி ஆகியவை பல மடங்கு உயர்த்தப்பட்டுள்ளது. ஆனால் அதற்கேற்ப சாலை வசதி, குடிநீர் வசதி, தெரு விளக்கு போன்ற அடிப்படை வசதிகள் செய்து தரப்படாததால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.



உத்திரமேரூர் அரசு பொது மருத்துவமனையில் புதிய கட்டிடம் கட்டுவதில் தாமதம் மற்றும் அங்கு நிலவும் சுகாதார சீர்கேடுகளால், சிகிச்சை பெறும் உள்நோயாளிகள் மற்றும் சிகிச்சைக்கு வரும் நோயாளிகள் மிகுந்த அவதியுறுகின்றனர். இதனால் ஏழை, எளிய நோயாளிகள் வேறு மருத்துவமனைகளுக்கு செல்லும் அவலம் தொடர்கிறது.

உத்திரமேரூரில் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையம் சரியான முறையில் செயல்படாததால், விவசாயிகள் கொண்டுவரும் நெல் மூட்டைகளைக் கொள்முதல் செய்வதில் தாமதம் மற்றும் நெல்லுக்கான தொகையும் காலதாமதமாக வழங்கப்படுகின்றன. இதனால் விவசாயிகள் பெருத்த நஷ்டத்துக்கு உள்ளாகி வருகின்றனர்.

உத்திரமேரூர் பகுதி வாழ் மக்களின் அடிப்படை வசதிகளை நிறைவேற்றாமல் வேடிக்கை பார்த்து வரும் திமுக அரசுக்கு எனது கடும் கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நிலையில், உத்திரமேரூர் பேரூராட்சி மற்றும் திமுக அரசை கண்டித்து காஞ்சிபுரம் மாவட்ட அதிமுக சார்பில் ஜூலை 17ம் தேதி காலை 10 மணிக்கு, உத்திரமேரூர் பேருந்து நிலையம் அருகில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும். இந்தக் கண்டன ஆர்ப்பாட்டம், கட்சியின் இலக்கிய அணிச் செயலாளர் வைகைச்செல்வன் தலைமையிலும்; காஞ்சிபுரம் மாவட்ட செயலாளர் ஏ.சோமசுந்தரம் முன்னிலையிலும் நடைபெறும். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## தமிழ்நாட்டு மக்களிடையே மதவாதப் பிரிவினையை உருவாக்க நினைப்பவர்களுக்கும் அதற்கு துணை போகும் துரோகிகளுக்கும் தமிழ்நாட்டில் இடமில்லை

சென்னை, ஜூலை.14-

தமிழ்நாட்டு மக்களிடையே மதவாதப் பிரிவினையை உருவாக்க நினைப்பவர்களுக்கும் அதற்கு துணை போகும் துரோகிகளுக்கும் தமிழ்நாட்டில் இடமில்லை என தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

மேலும் 'உடன்பிறப்பே வா' கூட்டத்தில் திமுக நிர்வாகிகள் இடையே முதல்வர் பேசியதாவது; மக்களின் ஆதரவு பெருகப் பெருக பொறுப்பும், கடமையும் கூடுகிறது. எதிர்பார்ப்பு அதிகமாகிறது. அதனைக் காப்பாற்ற நாம் அனைவரும் கடினமாக உழைத்தாக வேண்டும். அதிகமாக உழைக்க நான் தயாராக இருக்கிறேன். அனைவரும் அயராது பாடுபட வேண்டும். வெற்றியை ஈட்ட அயராது பாடுபட வேண்டும்.



இடையூறுகள், அவதூறுகள் எதுவாயினும் அவற்றை முறியடித்து கடக்கும் வலிமை கொண்டது பொதும க்களின் அரசாக திராவிட மாடல் அரசு திகழ்ந்து வருகிறது. வளர்ச்சி என்பது என்னால் மட்டும் ஆனதல்ல. உங்கள் ஒவ்வொருவரின் ஆக்கப்பூர்வமான நடவடிக்கையால் வளர்ந்து வருகிறது. திமுக. ஓரணியில் தமிழ்நாடு இயக்கம் மூலம் திமுகவில் புதிதாக 77 லட்சம் பேர் இணைந்துள்ளனர்.

இந்த அரசு அமைந்திட வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் 10 ஆண்டுகளாகப் பாடுபட்ட திமுக தொண்டர்களின் அளப்பரிய உழைப்பே, உங்களில் ஒருவனான நான், முதலமைச்சர் பொறுப்பை ஏற்பதற்கு அடிப்படை என்பதை ஒருபோதும் மறந்ததில்லை. திமுகவினரின் மனக்குரலை அறிந்துகொள்ளதான், 'உடன்பிறப்பே வா' எனும் தொகுதிவாரியான நிர்வாகிகள் சந்திப்புக் கூட்டம் நடைபெற்று வருகிறது.

பொதுமக்களை சந்திக்கும்போது, அவர்களிடம் தந்தை பெரியாரின் சமூகநீதி வழியிலும், கடமை கண்ணியம் கட்டுப்பாடு தவறாமல் பேரறிஞர் அண்ணா வகுத்துத் தந்த பாதையிலும், முத்தமிழறிஞர் கலைஞரின் மொழியால் தமிழன், இனத்தால் திராவிடன், நாட்டால் இந்தியன், உலகத்தால் மனிதன் எனும் வழியில் அணுக வேண்டும்.

தமிழ்நாட்டுக்கான திட்டங்களைப் புறக்கணித்து, தமிழ்ப் பண்பாட்டின் பெருமையை நிராகரித்து, தமிழ் மொழி வளர்ச்சிக்கு நிதி வழங்காமல் வஞ்சித்து, தமிழ்நாட்டு மக்களிடையே மதவாதப் பிரிவினையை உருவாக்க நினைப்பவர்களுக்கும், அவர்களுக்குத் துணை போகிற துரோகிகளுக்கும் தமிழ்நாட்டில் இடமில்லை என்பதை மக்கள் உறுதி செய்யும் வகையில் 'ஓரணியில் தமிழ்நாடு' முன்னெடுக்கப்படுகிறது" என பேசினார்.

## திருவண்ணாமலை மாவட்டம் திமுக கோட்டையாக திகழ்கிறது: துணை முதல்வர் உதயநிதி பேச்சு

திருவண்ணாமலை, ஜூலை.14-

திருவண்ணாமலை மாவட்டம் திமுக கோட்டையாக திகழ்கிறது. 2026 சட்டமன்ற தேர்தலுக்கு அடுத்த 8 மாதங்கள் மிக மிக முக்கியம் என திருவண்ணாமலை திமுகவினர் ஆலோசனைக் கூட்டத்தில் துணை முதல்வர் உதயநிதி உரையாற்றினார். மேலும் "பூத் பொறுப்பு என்பது சாதாரண பொறுப்பு அல்ல. நமது ஆட்சியை திராவிட மாடல் அரசு என பெருமையாக சொல்கிறோம். திராவிட மாடல் அரசால் தமிழ்நாடு




நம்பர் 1 மாநிலமாக உள்ளது. கலைஞர் உரிமைத் தொகை திட்டத்தை ஒட்டு மொத்த இந்தியாவே திரும்பி பார்க்கிறது. 1.15 கோடி மகளிர் 22 மாதங்களாக மாதந்தோறும் உரிமைத் தொகை வாங்கி வருகின்றனர். விடுப்பட்ட பெண்களுக்கு மகளிர் உரிமைத் தொகை க்கான விண்ணப்பங்கள் ஜூலை 15ல் வழங்கப்ப டுகிறது" என துணை முதல்வர் பேசினார்.

## கோயில் சொத்துகளுக்கான நிதி ஆதாரம் என்ன? வெள்ளை அறிக்கை கோரும் தமிழக பாஜக

சென்னை: ஜூலை.14-

அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள கோயில்களுக்கு வரக்கூடிய நிதி ஆதாரம் குறித்து வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும் என தமிழக அரசை பாஜக வலியுறுத்தி உள்ளது.

இதுகுறித்து பாஜக மாநில செய்தி தொடர்பாளர் ஏ.என்.எஸ்.பிரசாத் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: அரசு நிதியில் கல்லூரிகள் கட்டாமல், கோயில் நிதியில் ஏன் கட்டுகிறீர்கள்? என்று நியாயமான ஒரு கேள்வியை அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி கேட்டிருந்தார். பழனிசாமி, கோயில் நிதியை கல்விக்காக செலவழிக்கக் கூடாது என்கிறார். கல்விக்கு எதிராக பேசுகிறார் என வழக்கம் போல ஸ்டாலினும், திமுகவினரும், திசை திருப்பி வருகின்றனர்.




கோயில் நிதியில் கல்லூரி கூடாது என்று பழனிசாமி கூறவில்லை. அரசு நிதியில் கல்லூரிகள் கட்டாதது ஏன்? என்ற கேள்வியை தான அவர் முன்வைக்கிறார். கோயில் நிலத்தில், கோயில் நிதியில் கல்லூரி கட்டிடத்தை பிரமாண்டமாக கட்டிவிடலாம். ஆனால், அதை தொடர்ந்து நடத்திட, தேவையான நிதி ஆதாரத்தை அந்த கோயிலின் வாயிலாக பெறுவது என்பது, தற்போதைய நிலையில் சாத்தியமற்றதாக உள்ளது.

இந்து சமய அறநிலை துறையின் கட்டுப்பாட்டில் உள்ள கோயில் நிலங்கள், சொத்துகள், வாடகை விவரங்கள், வாடகையின் நிலுவைத் தொகைகள், கோயில் நிலங்களின், சொத்துகளின் சட்டவிரோத பரிமாற்றங்கள், இது தொடர்பான நீதிமன்ற வழக்குகள், மிக முக்கியமாக கோயில் நிலங்களுக்கும், சொத்துகளுக்கும் தற்போதைய சந்தை மதிப்பில் குத்தகையும் வாடகையும் வசூலித்தால் வரக்கூடிய நிதி ஆதாரம் உள்ளிட்டவை குறித்து முழுவதுமாக வெள்ளை அறிக்கையை உடனடியாக தமிழக அரசு வெளியிட வேண்டும்.

கோயில் நிதியில் பள்ளிகள் கல்லூரிகள் கட்டப்பட்டால், அதில் வழக்கமான படிப்புகளோடு, இந்து சமயம் சார்ந்த படிப்புகளும் கட்டாயம் இடம் பெற வேண்டும். மேலும், தேவாரம், திருவாசகம், திவ்ய பிரபந்தம் போன்ற பக்தி பாடல்களுடன் தொடங்கப்பட வேண்டும். அதேநேரம் கல்வி நிலையங்கள் ஆன்மிகம் சார்ந்ததாக இருக்க வேண்டும். இதுவே கோயிலுக்கு பணம் கொடுக்கும் பக்தர்களின் எதிர்பார்ப்பு. இந்துக்களின் எதிர்பார்ப்பு. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## படிப்பை தொடர வசதியின்றி தற்கொலை முயற்சி மாணவிக்கு கல்வி உதவி வழங்கிய காவலர்களுக்கு பாராட்டு

சென்னை, ஜூலை.14-

படிப்பை தொடர வசதி இல்லாத தால் தற்கொலைக்கு முயன்ற கல்லூரி மாணவிக்கு ரூ.50 ஆயிரம் வழங்கிய காவலர்களுக்கு பாராட்டுகள் குவிந்து வருகிறது.

திருமுல்லைவாயில் சரஸ்வதி நகரை சேந்த வேங்கடசாமி என்பவரின் மகள் ஹெப் சிபா. இவர் தனியார் கல்லூரியில் 2ம் ஆண்டு படித்து வருகிறார். இந்நிலையில் குடும்ப சூழ்நிலை காரணமாக படிப்பை தொடர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மருத்துவமனையில் சிகிச்சை: இதனால் மனமுடைந்த மாணவி விஷம் அருந்தி தற்கொலை செய்ய முயன்றார். இதனை அறிந்த மாணவியின் பெற்றோர்,உடனடியாக அவரை மீட்டு தனியார் மருத்துவமனையில் அனுமதித்தனர்.




இதுகுறித்து தகவல் அறிந்த போலீஸார் மாணவியிடம் விசாரணை மேற்கொண்டனர். அப்போது மாணவி படிப்பை தொடர வசதி இல்லாததால் தற்கொலைக்கு முயன்றதாக தெரிவித்தார். இதையடுத்து திருமுல்லைவாயில் காவல் நிலைய காவலர்கள் சேர்ந்து மாணவியின் படிப்புக்காக உதவ முன்வந்தனர்.

திருமுல்லைவாயில் காவல் ஆய்வாளர் மில்லர், துணை ஆய்வாளர்கள் பாமா, அமுல் ஆகியோர் மாணவியை நேரில் அழைந்து ரூ.50 ஆயிரத்துக் கான காசோலையை அவரிடம் வழங்கினர். படிப்பை தொடர வசதி இல்லாததால் தற்கொலைக்கு முயன்ற கல்லூரி மாணவிக்கு உதவிய காவலர்களுக்கு பாராட்டுகள் குவிந்து வருகிறது.

## தமிழக மீனவர்கள் 7 பேர் இலங்கை கடற்படையினரால் கைது

ராமேசுவரம்: ஜூலை.14-

எல்லை தாண்டி மீன் பிடித்ததாக கூறி, தமிழக மீனவர்கள் 7 பேரை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர். மேலும், அவர்கள் சென்ற படகையும் பறிமுதல் செய்துள்ளனர்.

ராமேசுவரம் மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து சுமார் 500 விசைப் படகுகளில் 3 ஆயிரம் மீனவர்கள் சனிக்கிழமை கடலுக்குச் சென்றனர். இதில் ஈசாக் என்பவருக்குச் சொந்தமான விசைப்படகில் ரூதர், சண்முகம், எடிசன், சக்திவேல், ஜெகதீஷ், டல்வின் ராஜ், அன்பழகன் ஆகிய 7 மீனவர்கள் நெடுந்தீவு அருகே உள்ள கடற்பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது, அங்கு வந்த் இலங்கை கடற்படையினர் எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி 7 பேரையும் கைது செய்தனர்.

சிறைப்பிடிக்கப்பட்ட 7 மீனவர்களும் காங்கேசன் துறை கடற்படை முகாமிற்கு கொண்டு சென்று அந்நாட்டு மீன்வளத்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டனர். தொடர்ந்து 7 மீனவர்களையும், ஊர்காவல்துறை நீதிபதியின் வீட்டில் ஆஜர்படுத்தப்பட்டு, யாழ்ப்பாணம் சிறையில் நேற்று




ஞாயிற்றுக்கிழமை மாலை அடைக்கப்பட்டனர்.

இதேபோல், சனிக்கிழமை இரவு கச்சத்தீவுக்கும் நெடுந்தீவுக்கும் இடையே மீன்பிடித்துக் கொண்டிருந்த மரிய சீரோன் என்பவருக்குச் சொந்தமான விசைப்படகை சிறைப்பிடிக்க முயன்ற இலங்கை கடற்படை ரோந்துப் படகு, மீனவர்களின் விசைப்படகு மீது மோதியதில் விசைப்படகின் பின் பகுதி உடைந்து சேதமடைந்தது.

அப்படகில் இருந்த ஸ்டாலின், முனீஸ்வரன், வியாகுலம், கொலம்பஸ், நாகேஷ், ஸ்டீபன், சரத்குமார் ஆகிய ஏழு மீனவர்களும் அதிர்ஷடவசமாக தப்பி ராமேசுவரம் மீன்பிடி துறைமுகம் வந்தடைந்தனர். மேலும், கடந்த ஒரு மாதத்தில் ராமேசுவரம் மீனவர்களின் மூன்று விசைப்படகுகளை கைப்பற்றி, இலங்கை கடற்படையினர் 22 மீனவர்களையும் கைது செய்துள்ளது குறிப்பிடதக்கது.

# மேட்டூர் அணையில் உபரிநீர் வெளியேற்றம் நிறுத்தம்: பாசனத்துக்கு 22,500 கன அடி நீர் திறப்பு



மேட்டூர், ஜூலை.14-

மேட்டூர் அணையின் 16 கண் மதகுகள் வழியாக உபரிநீர் வெளியேற்றம் இன்று காலை முதல் நிறுத்தப்பட்டுள்ளது. தொடர்ந்து, பாசனத்துக்கு நீர் மின் நிலையங்கள் வழியாக 22,500 கன அடி நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

கர்நாடகவில் காவிரி நீர் பிடிப்பு பகுதிகளில் பெய்த மழையின் காரணமாக, அங்குள்ள அணைகள் நிரம்பியது. இதையடுத்து, கபினி, கே.ஆர்.எஸ் அணைகளில் இருந்து காவிரி ஆற்றில் உபரிநீர் திறக்கப்பட்டது. நீர்வரத்து அதிகரித்தன் காரணமாக, மேட்டூர் அணைவரலாற்றில் முழு கொள்ளவான 120 அடியை கடந்த ஜூன் 29ம் தேதி 44வது முறையாக எட்டியது. பின்னர், அணை நீர்மட்டம் சரிந்து மீண்டும் கடந்த ஜூலை 5ம் தேதி நடப்பாண்டில் 2வது முறையாக முழு கொள்ளளவை எட்டியது. அணையின் பாதுகாப்பு கருதி, அணைக்கு வரும் நீர், அப்படியே காவிரி ஆற்றில் வெளியேற்றப்பட்டு வந்தது.

மேட்டூர் அணைக்கு இன்று காலை 8 மணிக்கு நீர்வரத்து விநாடிக்கு 30,500 கன அடியாக இருந்தது. தொடர்ந்து நீர்வரத்து அணையில் இருந்து நீர்மின் நிலையங்கள் வழியாக விநாடிக்கு 22,100 கனஅடி, 16 கண் மதகுகள் வழியாக 7,900 கன அடி என மொத்தம் 30,000 கன அடி நீர் காவிரி ஆற்றில் வெளியேற்றப்பட்டு வந்தது. இந்நிலையில் மேட்டூர் அணைக்கு வந்து கொண்டிருக்கும் நீரின் அளவு இன்று காலை குறைந்ததையடுத்து, கடந்த 15 நாட்களுக்கு பிறகு, 16 கண் மதகுகள் வழியாக உபரிநீர் வெளியேற்றம் இன்று காலை 9 மணி முதல் நிறுத்தப்பட்டுள்ளது.

மேட்டூர் அணையின் நீர்மின் நிலையங்கள் வழியாக டெல்டா பாசனத்துக்கு இன்று காலை 9 மணி முதல் 22,500 கன அடி நீர் வெளியேற்றப்பட்டு வந்தது. தொடர்ந்து, கால்வாய் பாசனத்துக்கு விநாடிக்கு 500 கன அடி நீர் திறக்கப்பட்டு வருகிறது. தற்போது, கடந்த 8நாட்களுக்கு பிறகு அணையின் நீர்மட்டம் 119 அடியாக சரிந்துள்ளது. தற்போது, உபரிநீர் வெளியேற்றம் நிறுத்தப்பட்டுள்ள நிலையில் நீரில் மூழ்கியிருந்த பாறைகள் வெளியே தெரிய தொடங்கியுள்ளன. மேலும், அணைக்கான நீர்வரத்து சரிந்தாலும், வரும் நாட்களில் மழை பெய்ய வாய்ப்பு உள்ள நிலையில், அணைக்கு நீர்வரத்து அதிகரிக்க வாய்ப்புள்ளது. இதன் காரணமாக, அணை 16 கண் மதகு பகுதியில் வெள்ள கட்டுப்பாட்டு மையத்தில் நீர்வளத்துறை அதிகாரிகள் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.





# திருவஞ்சேரி ஊராட்சியில் ஓரணியில் தமிழ்நாடு என்ற முழக்கத்துடன் உறுப்பினர் சேர்க்கும் நிகழ்ச்சி

திருவஞ்சேரி, ஜூலை.14-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் புனித தோமையர் மலை வடக்கு ஒன்றியம் தாம்பரம் தொகுதிக்குட்பட்ட திருவஞ்சேரி ஊராட்சியில் ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணியளவில், பாகம் என் 370,371,372,373 ஆகிய நான்கு பகுதிகளிலும் மாவட்ட கழக செயலாளர் மாண்புமிகு அமைச்சர் தா.மோ.அன்ப ரசன் அவர்களை ஆணைக்கிணங்க கழக செயலாளர் ஜிகே.விவேகானந்தன் அவர்களின் தலைமையில் தாம்பரம் தொகுதி பொறுப்பாளர் பருதி இளம் சுருதி, ஒன்றிய கழக பொறுப்பாளர் மஞ்சு ஜெயபாலன், ஒன்றிய கழக அவை தலைவர் எம்.சக்தி, திருவஞ்சேரி ஊராட்சி மன்ற துணைத் தலைவர் ருக்மணி சக்தி ஆகியோர் ஆய்வு செய்து ஓரணியில் தமிழ்நாடு என்ற முழக்கத்துடன் உறுப்பினர் சேர்க்கும் பணியினை துரிதப்படுத்தி வைத்தனர். இந்நிகழ்வின் போது கிளைக் கழக செயலாளர் மகி மனோகரன், ஒன்றிய கழக அணிகளின் நிர்வாகிகள் செல்வி. டாக்டர்.மஞ்சு பாஷினி, எம்.வெங்கடேசன், எம்.செந்தில், ஏ.சிவராஜ், ஏ.செல்வம் கிளை கழக நிர்வாகிகள் ஜி.மதுரை, நமச்சிவாயம், சேகர், மோகன்ராஜ், எம்.நித்யா, எஸ்.பாண்டியன், எம்.யுவராஜ், என்.கோபி, பார்த்தீபன், பாபுஜி மற்றும் பாக முகவர்கள், தொழில் நுட்ப அணியினர், மகளிர், இளைஞர் அணியினர் திரளாக கலந்து கொண்டு உறுப்பினர் சேர்க்கையை நிகழ்ச்சியில் சிறப்புத்தனர்.

# சிறுமுகை அருகே நீரில் மூழ்கத் தொடங்கிய காந்தையாற்று பாலம்



கோவை, ஜூலை.14-

சிறுமுகை அருகே நீரில் மூழ்கத் தொடங்கிய காந்தையாறு பாலத்தால் வாகனப் போக்குவரத்து முடங்கியது. இதனால் கிராம மக்கள் பரிசல் மூலம் பயணித்து வருகின்றனர்.

கோவை மாவட்டம் சிறுமுகை பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில், லிங்காபுரம் என்ற கிராமம் உள்ளது. இக்கிராமத்தில் பவானியாற்றில் இணையும் காட்டாறான காந்தையாறு ஓடுகிறது. இந்த ஆற்றின் வடக்குப் பகுதியில் உள்ள மறுகரையில் பழங்குடியின மக்கள் அதிகம் வசிக்கும் காந்தவயல், காந்தையூர், மொக்கைமேடு, உளியூர் ஆகிய மலையடிவார கிராமங்கள் உள்ளன. மூவாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் இங்கு வசிக்கின்றனர். இக்கிராமங்களைச் சேர்ந்த மக்கள் கல்வி, வேலை வாய்ப்பு, மருத்துவம், விவசாயப் பொருட்கள் விற்பனை என அனைத்து தேவைகளுக்கும் காந்தையாற்றை கடந்து லிங்காபுரத்தை அடைந்த பின்னரே நகரப் பகுதிக்கு செல்ல இயலும்.

கடந்த 2005ம் ஆண்டு தமிழக அரசின் சார்பில், ரூ.4 கோடி மதிப்பில் காந்தையாற்றின் குறுக்கே 20 அடி உயரத்தில் பாலம் கட்டப்பட்டது. ஆனால் மழைக்காலத்தில் காட்டாறுகளில் நீர் வரத்து அதிகரிப்பு, பில்லூர் அணை நிரம்பி அதன் உபரி நீர் பவானியாற்றில் திறந்து விடப்படுவது போன்ற காரணங்களினால் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு, எப்போதெல்லாம் பவானிசாகர் அணையின் நீர்மட்டம் உயரம் 97 அடியை கடக்கிறதோ அப்போதெல்லாம் இந்த காந்தையாற்று பாலம் நீருக்கடியில் மூழ்கத் தொடங்கி விடும்.

இந்நிலையில், தென் மேற்கு பருவமழையின் காரணமாக பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 97 அடியை கடந்ததால் நேற்றிலிருந்து இப்பாலம் நீருக்குள் மூழ்கத் தொடங்கியுள்ளது. இதனால் பாலத்தில் வாகனப் போக்குவரத்து முடங்கியது. இதனால் காட்டாற்றை கடந்து செல்ல மீண்டும் பரிசல்களையே இப்பகுதி மக்கள் பயன்படுத்த தொடங்கியுள்ளனர்.

இதுகுறித்து அப்பகுதி பொதுமக்கள் கூறும்போது, ''லிங்காபுரம் காந்தவயல் இடையே உள்ள காந்தையாற்றை கடக்க புதிய உயர் மட்டப் பாலம் ரூ.15.40 கோடி மதிப்பில் கட்டும் பணி நெடுஞ்சாலைத்துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணி தற்போது 70 சதவீதம் மட்டுமே முடிக்கப்பட்டுள்ளது. மந்தமாக நடக்கும் இப்பணியை விரைவுபடுத்தி முடிக்க வேண்டும். அப்போது தான் மக்கள் பாதுகாப்பாக பயணிக்க முடியும்'' என்றனர்.

# போலீஸ் விசாரணையின்போது உயிரிழந்தவர்கள் குடும்பத்துடன் தவெக தலைவர் விஜய் சந்திப்பு

சென்னை, ஜூலை.14-

போலீஸ் விசாரணையின்போது உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரை தவெக தலைவர் விஜய் நேற்று சந்தித்தார். சிவகங்கை மாவட்டம் திருப்புவனத்தைச் சேர்ந்த அஜித்குமார், போலீஸ் விசாரணையின்போது உயிரிழந்தார். இந்த சம்பவத்தைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடைபெறும் என தவெக சார்பில் அறிவிக்கப்பட்டது. அதன்படி, சென்னை சிவானந்தா சாலையில் இன்று போராட்டம் நடைபெற உள்ளது. முன்னதாக, கடந்த 4 ஆண்டுகளில் காவல் நிலைய விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டு உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரை தவெக தலைவர் விஜய் நேற்று சந்தித்துப் பேசினார். செங்கல்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த கோகுல், அயனாவரத்தைச் சேர்ந்த விக்னேஷ், கொடுங்கையூரைச் சேர்ந்த அப்பு என்ற ராஜசேகர், திருவண்ணாமலையைச் சேர்ந்த தங்கமணி, புதுக்கோட்டையைச் சேர்ந்த சின்னதுரை, தருமபுரியைச் சேர்ந்த செந்தில் ஆகியோரது குடும்பத்தினரை சென்னை பனையூரில் உள்ளகட்சித் தலைமைய அலுவலகத்தில் விஜய் சந்தித்துப் பேசினார். அவர்களிடம், உயிரிழந்தவர்களை எவ்வாறு காவல் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர், உயிரிழப்புக்கு பின் அரசு சார்பில் நிதியுதவி வழங்கப்பட்டதா,

சம்பந்தப்பட்டவரின் இறப்புக்குப் பின்னர் குடும்பத்தினர் எதிர்கொண்ட பாதிப்புகள், குடும்பத்தின் தற்போதைய நிலை, வழக்கின் நிலை, காவலர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து விஜய் கேட்டறிந்தார். இன்று சென்னையில் நடைபெறும் ஆர்ப்பாட்டத்தில், பாதிக்கப்பட்ட குடும்பத்தினரை மேடையேற்றவும் தவெக தரப்பில் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், இதில் விஜய் பங்கேற்க வாய்ப்புள்ளதாகவும் தவெக தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உடல் நலக்குறைவால் பிரபல நடிகர் கோட்டா சீனிவாசன் (83) காலமானார்

ஆந்திராவை சேர்ந்த பிரபல நடிகர் கோட்டா சீனிவாச ராவ் ஜூலை 10ம் தேதி 1942ம் ஆண்டு விஜயவாடாவில் பிறந்தார். 1978ம் ஆண்டு பிரணம் கரீது தெலுங்கு திரைப்படம் மூலம் கோட்டா சீனிவாசராவ் சினிமாவில் அறிமுகமானார். 1999 - 2004ம் ஆண்டு வரை ஆந்திர பிரதேச விஜயவாடா கிழக்குத் தொகுதியின் சட்டசபை உறுப்பினராக இருந்துள்ளார். இவர் தெலுங்கு, தமிழ் உள்ளிட்ட பல்வேறு மொழிகளில் 750க்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார். 2003ம் ஆண்டு வெளியான சாமி படத்தின் மூலம் தமிழ் திரையுலகில் அறிமுகமானார். மேலும் திருப்பாச்சி, கோ, சகுனி, குத்து, ஏய் போன்ற பல படங்களில் நடித்துள்ளார். திரைத்துறை சேவையை பாராட்டி 2015ல் கோட்டா சீனிவாசராவுக்கு ஒன்றிய அரசு பத்மஸ்ரீ விருது வழங்கி கவுரவித்தது இவர் நடிப்பு மட்டுமல்லாது பாடகர், டப்பிங் கலைஞர் என பன்முக திறமை வாய்ந்தவராக வளம் வந்தார். இவரது நடிப்பில் கடைசியாக 2023ம் ஆண்டு சுவர்ண சுந்தரி என்ற படம் வெளியானது. இவர் கடந்த சில நாட்களாக உடல்நலக் குறைவால் அவதிப்பட்டு வந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார். இந்நிலையில் இன்று (ஜூலை 13) அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். அவரது மறைவிற்கு திரைத்துறையினர், ரசிகர்கள் என பல்வேறு தரப்பினர் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.



# இன்டர்லாக்கிங் செய்யப்படாத லெவல் கிராசிங் கேட்டுகளில் குரல் பதிவை சரிபார்க்க ரயில்வே வாரியம் அறிவுறுத்தல்

சென்னை, ஜூலை.14-

இன்டர்லாக்கிங் செய்யப்படாத லெவல் கிராசிங் கேட்டுகளில் பாதுகாப்பு விதிமுறைகளை சரியாக பின்பற்றவும், கோட்ட அளவில் குரல் பதிவை சரிபார்க்குமாறும் ரயில்வே வாரியம் அறிவுறுத்தியுள்ளது.

கடலூர் செம்மங்குப்பத்தில் கடந்த 8ம் தேதி பள்ளி வாகனம் மீது ரயில் மோதியதில் 3 மாணவர்கள் உயிரிழந்தனர். இந்த ரயில்வே கேட் இன்டர்லாக்கிங் செய்யப்படாமல் இருந்தது தெரியவந்துள்ளது. இதன் எதிரொலியாக, ரயில்வே லெவல் கிராசிங்ல் பின்பற்ற வேண்டிய 11 நடைமுறைகளை இந்திய ரயில்வே துறை வெளியிட்டது. மேலும், 15 நாட்களுக்கு பாதுகாப்பு ஆய்வு மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டது.

தற்போது, தெற்கு ரயில்வேயில் உள்ள கோட்டங்களில் பாதுகாப்பு அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர். அரக்கோணம்செங்கல்பட்டு வழித்தடத்தில் உள்ள திருமால்பூர் ரயில்வே கேட்டுகளில் அண்மையில் நடந்த ஆய்வின்போது, இரவுப் பணியில் தூங்கிக் கொண்டிருந்த 2 கேட் கீப்பர் கள் பணியிடை நீக்கம் செய்யப்பட்டனர்.

இந்நிலையில், இன்டர்லாக்கிங் செய்யப்படாத லெவல் கிராசிங் கேட்டுகளில் பாதுகாப்பு விதிமுறைகளை சரியாக பின்பற்றவும், கோட்ட அளவில் குரல் பதிவை சரிபார்க்கவும் ரயில்வே வாரியம் அறிவுறுத்தியுள்ளது. மேலும், இன்டர்லாக்கிங் செய்யப்படாத லெவல் கிராசிங் கேட்டுகளில் நிலைய அதிகாரிக்கும், கேட்மேன்களுக்கும் இடையிலான உரையாடலை பதிவு செய்யவும் வழிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன. ரயில்வே கோட்டங்களில் தினமும் லெவல் கிராசிங்குகளில் சோதனை நடத்த வேண்டும். இன்டர்லாக்கிங் செய்யப்படாத லெவல் கிராசிங்குகள் பாதுகாப்பு விதிமுறைகளுடன் இயங்குகின்றனவா, குரல் பதிவு சரியாக இயங்குகிறதா என்று கண்காணிக்குமாறும் ரயில்வே வாரியம் அறிவுறுத்தியுள்ளது.

# ஜூலை 16, 17ல் சென்னை உள்ளிட்ட 6 மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு

சென்னை, ஜூலை.14-

தமிழகத்தில் வரும் 16, 17 தேதிகளில் சென்னை, திருவள்ளூர் உள்ளிட்ட 6 மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: தமிழகம் நோக்கி வீசும் மேற்கு திசை காற்றில் வேக மாறுபாடு நிலவுகிறது. இதன் காரணமாக தமிழகத்தில் இன்றும் (ஜூலை 14), நாளையும் ஓரிரு இடங்களிலும், 16ம் தேதி முதல் 19ம் தேதி வரை ஒருசில இடங்களிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

தமிழகத்தில் நாளை நீலகிரி மாவட்டம் மற்றும் கோவை மாவட்டங்களிலும், 16, 17 தேதிகளில் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், ராணிப்பேட்டை, நீலகிரி மாவட்டங்கள் மற்றும் கோவை மாவட்டத்தின் மலைப்பகுதிகளில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. 18, 19 தேதிகளில் நீலகிரி மற்றும் கோவை மாவட்ட மலைப்பகுதிகளில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் இன்று ஒருசில இடங்களில் அதிகபட்ச வெப்பநிலை, வழக்கத்தை விட 7 டிகிரி ஃபாரன்ஹீட் வரை அதிகரிக்கக்கூடும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 102 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 80 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும்.தென் தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதிகளில் இன்று முதல் 16ம் தேதி வரை சூறாவளிக்காற்று மணிக்கு 45 முதல் 55 கி.மீ. வேகத்திலும், இடையிடையே 65 கி.மீ. வேகத்திலும் வீசக்கூடும். எனவே இப்பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம்.

தமிழகத்தில் நேற்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சமாக சென்னை வளசரவாக்கம், ஐஸ் ஹவுஸ், நெற்குன்றம், சைதாப்பேட்டை ஆகிய இடங்களில் தலா 4 செமீ, வட பழனி, அமைந்தகரை, சென்னை சென்ட்ரல், ஏசிஎஸ் மருத்துவக் கல்லூரி, நந்தனம், எம்ஜிஆர் நகர், சென்னை நுங்கம்பாக்கம், திருவள்ளூர் மாவட்டம் பூந்தமல்லி ஆகிய இடங்களில் தலா 3 செமீ, கோவை மாவட்டம் சின்னக் கல்லார், சென்னை கொரட்டூர், ஆட்சியர் அலுவலகம், கிண்டி, ராணிப்பேட்டை மாவட்டம் பனப்பாக்கம், அம்மூர், நீலகிரி மாவட்டம் பார்வூட் ஆகிய இடங்களில் தலா 2 செமீ மழை பதிவாகியுள்ளது. இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# விண்ணுக்கு மனிதர்கள் பயணிக்கும் ககன்யான் திட்டத்துக்கான ராக்கெட் டிசம்பரில் பரிசோதனை: இஸ்ரோ தலைவர் தகவல்




நாகர்கோவில், ஜூலை.14-

மனிதரை விண்ணுக்கு ராக்கெட்டில் அனுப்பும் ககன்யான் திட்டத்தில், ஆளில்லா ராக்கெட் பரிசோதனை வரும் டிசம்பர் மாதம் மேற்கொள்ளப்படும் என்று இஸ்ரோ தலைவர் வி.நாராயணன் கூறினார். கன்னியாகுமரி மாவட்டம் குலசேகரத்தில் நடைபெற்ற இளம் விஞ்ஞானிகளுக்கான சிறப்பு பயிலரங்கில் பங்கேற்ற வி.நாராயணன், பின்னர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: 'ககன்யான்' என்ற திட்டத்தை இஸ்ரோ நடைமுறைப்படுத்த உள்ளது. இந்த திட்டத்தின்படி, இந்தியர் ஒருவரை ஏ.ஒ.ஜி. முறைப்படி ராக்கெட் மூலம் விண்ணுக்கு அனுப்பி, அவரை அங்கே பாதுகாப்பாக வைத்திருந்து, மீண்டும் அவரை பாதுகாப்பாக பூமிக்கு அழைத்து வர இருக்கிறோம். இதற்கான, சுற்றுச்சூழல் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றிய ஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த திட்டம் 2012 ஆகஸ்ட் 15ம் தேதி பிரதமர் மோடியால் அறிவிக்கப்பட்டது. அப்போது இந்த திட்டத்துக்கு ரூ.10,000 கோடி நிதி ஒதுக்கப்பட்டது தற்போது ரூ. 20,000 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. வரும் டிசம்பர் மாதம் ஆளில்லா ராக்கெட் அனுப்பப்படும். தொடர்ந்து இதுபோல 2 ராக்கெட்கள் அனுப்பப்பட்டு பரிசோதனை செய்யப்படும். 2027ம் ஆண்டு மனிதருடன் ராக்கெட் அனுப்பப்படும்.

ஏஐ தொழில்நுட்பம் தொடர்பான ஆய்வுக் கூடங்களை இஸ்ரோ சார்பிலும் அமைத்துள்ளோம். இது மிகுந்த பயனுள்ளதாக உள்ளது. நிலவுக்கு மனிதனை அனுப்புவது குறித்தும் பிரதமர் அறிவித்துள்ளார். நிலவில் ராக்கெட்டை இறக்குவது எளிதான விஷயம் கிடையாது. நம்மிடம் இருக்கும் மார்க்3 ராக்கெட் பத்தாயிரம் கிலோ எடையைத் தான் கொண்டு செல்லும். நிலவில் ராக்கெட்டை இறக்கவேண்டும் என்றால் 125 டன் எடையைக் கொண்டு செல்ல வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.



## உளவியல் கதையில் மிஷா கோஷல்

சேரன், சசிகுமார், பிரசன்னா, ஆரி அர்ஜூனன் இணைந்து ‘பேரடாக்ஸ்’ என்ற குறும்படத்தின் டிரைலரை வெளியிட்டனர். தி செய்லர்மேன் பிக்சர்ஸ் சார்பில் எல்.கார்த்திகேயன் தயாரித்துள்ளார். பிரியா கார்த்திகேயன் இயக்கத்தில் துஷ்யந்த் ஜெயப்பிரகாஷ், மிஷா கோஷல் நடிப்பில் உளவியல் அடிப்படையில் உருவான இப்படத்தின் தலைப்புக்கு தமிழில் ‘முரண்பாடு’ என்று அர்த்தம். இது மனித உளவியல் சார்ந்த கதைக்கு பொருந்தும் வகையில் அமைந்துள்ளது. இந்த குறும்படத்துக்காக சேரன் ஒரு பாடலை எழுதியுள்ளார்.

25 நிமிடங்கள் ஓடும் இப்படம் குறித்து பேசிய பிரியா கார்த்திகேயன், ‘ஒரு மனிதனின் உளவியல் பற்றி இப்படம் அலசுகிறது. சராசரி வாழ்க்கையை தொடர்ந்து வரும் ஹீரோ, நாளடைவில் தனது மனைவி மற்றும் குடும்பத்தை விட்டு விலகி செல்கிறான். அப்போது ஒரு எதிர்பாராத சம்பவம் நடக்கிறது. பிறகு என்ன நடக்கிறது என்பதை பார்வையாளர்களே புரிந்துகொள்ளலாம்’ என்றார். கே.எஸ்.சுந்தரமூர்த்தி இசை அமைக்க, ஹரி பிரகாஷ் எடிட்டிங் செய்துள்ளார். ஃபைசல் வி.காலித் ஒளிப்பதிவு செய்துள்ளார்.



## கார்த்தி ஜோடியாக கல்யாணி

ட்ரீம் வாரியர் பிக்சர்ஸ், ஐ.வி.ஒய் எண்டர்டெயின்மெண்ட் இணைந்து தயாரிக்கும் புதிய படம் குறித்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. இப்படம் கடந்த 1960 காலக்கட்டத்தில் ராமேஸ்வரத்தில் நடக்கும் பிரமாண்டமான ஆக்ஷன் டிராமா கதைக்களத்தில் உருவாகிறது. இதற்கு ‘மார்ஷல்’ என்று பெயரிடப்பட்டுள்ளது. ’தீரன் அதிகாரம் ஒன்று’, ’கைதி’ போன்ற ரசிகர்களால் பெரிதும் பாராட்டப்பட்ட படங்களை தொடர்ந்து கார்த்தி மற்றும் ‘டாணாக்காரன்’ படத்தின் இயக்குனர் தமிழ் ஆகியோரின் மற்றொரு லட்சிய முயற்சியாக இப்படம் உருவாகிறது. இதில் கார்த்தி ஜோடியாக கல்யாணி பிரியதர்ஷன் நடிக்கிறார்.

மற்றும் சத்யராஜ், பிரபு, லால், ஜான் கொக்கன், ஈஸ்வரி ராவ் நடிக்கின்றனர். சாய் அபயங்கர் இசை அமைக்க, சத்யன் சூரியன் ஒளிப்பதிவு செய்கிறார். பிலோமின் ராஜ் எடிட்டிங் செய்ய, அருண் வெஞ்சாரமூடு தயாரிப்பு வடிவமைப்பு பொறுப்பு ஏற்றுள்ளார். ட்ரீம் வாரியர் பிக்சர்ஸ் சார்பில் எஸ்.ஆர்.பிரகாஷ் பாபு, எஸ்.ஆர்.பிரபு, ஐ.வி.ஒய் எண்டர்டெயின்மெண்ட் சார்பில் இஷான் சக்சேனா இணைந்து தயாரிக்கின்றனர். கடந்த 1960 காலக்கட்டத்தில் இருந்த ராமேஸ்வரத்தை மீண்டும் உருவாக்கும் அரங்கம் அமைக்கப்படுகிறது. தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி ஆகிய மொழிகளில் படம் திரைக்கு வருகிறது.

## டிரெண்டிங்கில் நடிக்க பயந்த பிரியாலயா



ராம் பிலிம் பேக்டரி சார்பில் மீனாட்சி ஆனந்த் தயாரிக்க, சிவராஜ் இயக்கத்தில் கலையரசன், பிரியாலயா, பிரேம் குமார், பெசன்ட் ரவி, அலெக்சாண்டர், வித்யா போர்கியா, ஷிவன்யா பிரியங்கா, கவுரி நடித்துள்ள திரில்லர் படம், ‘டிரெண்டிங்’. பிரவீன் பாலு ஒளிப்பதிவு செய்ய, சாம் சி.எஸ் இசை அமைத்துள்ளார். குட்டி ரேவதி, கார்த்திக் நேத்தா பாடல்கள் எழுதியுள்ளனர். வரும் 18ம் தேதி திரைக்கு வரும் இப்படம் குறித்து பிரியாலயா கூறுகையில், ‘இப்படத்துக்கான ஆடிஷன் முடிந்தபோது, சந்தோஷத்தை விட பயம்தான் அதிகமாக இருந்தது. ஆக்டிங் ஸ்கோப் கொண்ட படத்தில் நடிக்க வேண்டும் என்ற என் நீண்ட நாள் கனவு இதில் பலித்துள்ளது.

கலையரசன் மிகவும் திறமையான நடிகர். அவருடன் இணைந்து நடிக்க வேண்டும் என்று நினைத்திருந்தேன். அந்த எண்ணமும் தற்போது நிறைவேறியுள்ளது. இது ஒரு எமோஷனல் ரோலர் கோஸ்டர் படம். இதில் நடித்தது உண்மையிலேயே நல்லதொரு அனுபவமாக இருந்தது. சாம் சி.எஸ் மிக அற்புதமாக இசை அமைத்துள்ளார். சோஷியல் மீடியாவை பயன்படுத்தும் அனைவரும் அவசியம் பார்க்க வேண்டிய படம் இது. ஒவ்வொரு காட்சியும் ரசிகர்களை இருக்கை நுனியில் அமர வைக்கும்’ என்றார். கலையரசன் பேசும்போது, ‘இது என் திரைப்பயணத்தில் மிக முக்கியமான படமாக இருக்கும்.

நான் ஹீரோவாக பல படங்களில் நடித்துள்ளேன் அவற்றில் இப்படம் வெற்றிப் படங்களில் ஒன்றாக இருக்கும். அலெக்சாண்டர் என்ற நடிகர் படம் முழுக்க முகமே தெரியாமல் நடித்துள்ளார். அவர்தான் இப்படத்தின் ஆதாரம்’ என்றார். கலையரசன் மனைவி பிரியா, இப்படத்தின் காஸ்ட்யூம் டிசைனராக பணியாற்றியுள்ளார்.

## கார்த்தி தமிழ் இணையும் ‘மார்ஷல்’ என்ன ஸ்பெஷல்?



தமிழ் இயக்கத்தில் கார்த்தி நடிக்கவுள்ள படத்துக்கு ‘மார்ஷல்’ என தலைப்பிட்டுள்ளனர். ‘சர்தார் 2’ படத்தை முடித்துவிட்டு, தமிழ் இயக்கத்தில் உருவாகும் படத்துக்கு தேதிகள் ஒதுக்கினார் கார்த்தி. இது பெரும் பொருட்செலவில் உருவாகும் படம் என்பதால் இதன் படப்பிடிப்புக்கான பணிகள் நீண்ட நாட்களாக நடைபெற்று வருகின்றன.

மேலும், 1960களில் ராமேஸ்வரத்தில் நடக்கும் ஒரு பிரம்மாண்டமான ஆக்ஷன் படமாக இது உருவாகிறது. இதன் படப்பூஜையுடன் கூடிய பணிகள் சென்னையில் தொடங்கப்பட்டன. இதற்கு ‘மார்ஷல்’ என தலைப்பிடப்பட்டு அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது படக்குழு. 1960களில் நடக்கும் கதை என்பதால், படத்தின் பூஜையையும் அந்தக் காலகட்டத்தின் அரங்குகளை அமைத்து நடத்தியிருக்கிறது படக்குழு.

‘மார்ஷல்’ படத்தில் கல்யாணி பிரியதர்ஷன், சத்யராஜ், பிரபு, லால், ஜான் கொக்கன், ஈஸ்வரி ராவ் உள்ளிட்ட பலர் கார்த்தியுடன் நடிக்க ஒப்பந்தமாகி இருக்கிறார்கள். இப்படத்துக்கு ஒளிப்பதிவாளராக சத்யன் சூரியன், இசையமைப்பாளராக சாய் அபயங்கர், எடிட்டராக பிலோமின் ராஜ் மற்றும் தயாரிப்பு வடிவமைப்பாளராக அருண் வெஞ்சரமூடு ஆகியோர் பணிபுரிய இருக்கிறார்கள்.

இப்படத்தை ட்ரீம் வாரியர் பிக்சர்ஸ் மற்றும் ஐ.வி.ஓய் எண்டர்டெயின்மெண்ட் ஆகிய நிறுவனங்கள் இணைந்து தயாரிக்கின்றன. இதனை தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் மற்றும் இந்தி ஆகிய மொழிகளில் வெளியிடவும் படக்குழு முடிவு செய்திருக்கிறது.



## இங்கிலாந்துக்கு எதிராக முதன்முறையாக டி20 தொடரை வென்றது இந்திய மகளிரணி

இங்கிலாந்து அணிக்கு எதிராக முதன்முறையாக டி20 கிரிக்கெட் தொடரை வென்று சாதனை படைத்துள்ளது இந்திய மகளிர் அணி.

இந்திய மகளிர் கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகள் இடையிலான 4வது டி20 கிரிக்கெட் போட்டி நேற்று முன்தினம் இரவு மான்செஸ்டரில் நடைபெற்றது. முதலில் பேட் செய்த இங்கிலாந்து அணி 20 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 126 ரன்கள் எடுத்தது. அதிகபட்சமாக கேப்டன் சோபியா டங்க்லி 22, டாமி பியூமாண்ட் 20, ஆலிஸ் கேப்ஸி 18 ரன்கள் சேர்த்தனர். பந்து வீச்சில் இந்திய அணி தரப்பில் ஸ்ரீ சாரணி, ராதா யாதவ் ஆகியோர் தலா 2 விக்கெட்கள் கைப்பற்றினர்.

127 ரன்கள் இலக்குடன் பேட் செய்த இந்திய மகளிர் அணி 17 ஓவர்களில் 4 விக்கெட் இழப்புக்கு 127 ரன்கள் எடுத்து வெற்றி பெற்றது. ஸ்மிருதி மந்தனா 32, ஷபாலி வர்மா 31, கேப்டன் ஹர்மன்பிரீத் கவுர் 26, ஜெமிமா ரோட்ரிக்ஸ் 24 ரன்கள் சேர்த்தனர். 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற இந்திய மகளிர் அணி 5 ஆட்டங்கள் கொண்ட டி20 கிரிக்கெட் தொடரை 31 என கைப்பற்றியது.

இங்கிலாந்து அணிக்கு எதிராக இருதரப்பு டி20 தொடரை இந்திய அணி வெல்வது இதுவே முதன்முறையாகும். 2006ம் ஆண்டு டெர்பியில் நடைபெற்ற ஒரே ஒரு டி20 போட்டியில் இந்திய அணி, இங்கிலாந்தை வீழ்த்தியது. அதன் பிறகு இந்திய மகளிர் அணி, இங்கிலாந்துக்கு எதிரான ஒவ்வொரு டி20 தொடரிலும், உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தோல்விகளையே சந்தித்து வந்திருந்தது. தற்போதுதான் முதன்முறையாக டி20 தொடரை தன்வசப்படுத்தி உள்ளது.

இந்திய மகளிர் அணி முதல் ஆட்டத்தில் 97 ரன்கள் வித்தியாசத்திலும், 2வது ஆட்டத்தில் 24 ரன்கள் வித்தியாசத்திலும் வெற்றி கண்டிருந்தது. 3வது ஆட்டத்தில் இங்கிலாந்து அணி 5 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருந்தது. கடைசி மற்றும் 5வது டி20 போட்டி நாளை (12ம் தேதி) பர்மிங்காமில் நடைபெறுகிறது.



## சச்சின் டெண்டுல்கரின் உருவப்படம் எம்சிசி அருங்காட்சியகத்தில் திறப்பு

இந்திய கிரிக்கெட் அணியின் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கரின் உருவப் படம் லண்டன் லார்ட்ஸ் மைதானத்தில் உள்ள அருங்காட்சியகத்தில் நேற்று திறக்கப்பட்டது.

18 ஆண்டுகளுக்கு முன்னர் எடுக்கப்பட்ட இந்த படம். ஓவியர் ஸ்டுவர்ட் பியர்சன் ரைட் என்பவரால் வரையப்பட்டுள்ளது. இந்த ஆண்டு இறுதி வரை அருங்காட்சியகத்தில் இருக்கும் இந்த படம் அதன் பின்னர் பெவிலியனுக்கு மாற்றப்படும். ஓவியர் ஸ்டுவர்ட் பியர்சன் ரைட் இதற்கு முன்னர் கபில் தேவ், பிஷன் சிங் பேடி, திலிப் வெங்சர்க்கார் ஆகியோரின் படங்களை வரைந்துள்ளார்.

உருவப்பட திறப்பு விழாவில் பங்கேற்ற சச்சின் டெண்டுல்கர் கூறும்போது, “இது மிகப்பெரிய கவுரவம். 1983ம் ஆண்டு, இந்தியா உலகக் கோப்பையை வென்றபோது, அதுதான் லார்ட்ஸுடனான எனது முதல் அறிமுகமாக இருந்தது. கபில்தேவ் கோப்பையை கைகளில் ஏந்தி உயர்த்துவதை பார்த்தேன்.

அந்த தருணமே எனது கிரிக்கெட் பயணத்தை தூண்டியது. இன்று, பெவிலியன் உள்ளே எனது உருவப்படம் செல்ல இருக்கிறது. கிரிக்கெட் வாழ்க்கை முழுமை பெற்றது போல் உணர்கிறேன். எனது வாழ்க்கையைப் பற்றி நான் சிந்திக்கும்போது, அது என் முகத்தில் ஒரு புன்னகையை வரவழைக்கிறது. இது உண்மையிலேயே சிறப்பு வாய்ந்தது” என்றார்.

லார்ட்ஸ் உருவப்படம் திட்டம் 30 ஆண்டுகளாக இயங்கி வருகிறது. ஆனால் எம்சிசி அருங்காட்சியகம் விக்டோரியன் காலத்திலிருந்தே கலை மற்றும் கலைப்பொருட்களை சேகரித்து வருகிறது, 1950ம் ஆண்டுகளில் திறக்கப்பட்ட இந்த பிரத்யேக அருங்காட்சியகம் ஐரோப்பாவின் பழமையான விளையாட்டு அருங்காட்சியகமாக திகழ்ந்து வருகிறது. இங்கு சுமார் 3 ஆயிரம் படங்கள் உள்ளன.

## எம்சிசி முருகப்பா தங்க கோப்பை ஹாக்கி தொடர்: கர்நாடகா வெற்றி



எம்சிசிமுருகப்பா தங்க கோப்பை ஹாக்கி தொடர் சென்னை எழும்பூரில் உள்ள மேயர் ராதாகிருஷ்ணன் விளையாட்டரங்கில் நேற்று தொடங்கியது.

முதல் ஆட்டத்தில் ‘ஏ’ பிரிவில் உள்ள மகாராஷ்டிரா தமிழ்நாடு மோதின. இந்த ஆட்டம் 1-1 என்ற கோல் கணக்கில் டிராவில் முடிவடைந்தது. மகாராஷ்டிரா அணி சார்பில் 22வது நிமிடத்தில் ரோகன் பாட்டீலும், தமிழ்நாடு அணி தரப்பில் 42வது நிமிடத்தில் சோமன்னாவும் கோல் அடித்தனர்.

‘பி’ பிரிவில் நடைபெற்ற ஆட்டத்தில் கர்நாடகா அணி 2-1 என்ற கோல் கணக்கில் மத்திய நேரடி வரிகள் வாரியத்தை தோற்கடித்தது. கர்நாடக அணி சார்பில் ராகுல் (45வது நிமிடம்), பரத் மகாலிங்கப்பா (52வது நிமிடம்) ஆகியோர் தலா ஒரு கோல் அடித்தனர். மத்திய நேரடி வரிகள் வாரியம் அணி தரப்பில் 56வது நிமிடத்தில் பிரனம் கவுடா கோல் அடித்தார். இன்று (11ம் தேதி) நடைபெறும் ஆட்டங்களில் இந்திய ராணுவம் தமிழ்நாடு, மகாராஷ்டிரா என்சிஒஇ (போபால்), ஐஓசி மத்திய நேரடி வரிகள் வாரியம் அணிகள் மோதுகின்றன.

## ‘தன் சாதனையை முறியடிக்க முயற்சித்திருக்கலாம் என லாரா என்னிடம் சொன்னார்’ வியான் முல்டர் பகிர்வு

டெஸ்ட் கிரிக்கெட்டில் தன் 400 ரன் சாதனையை முறியடிக்க முயற்சித்திருக்கலாம் என லாரா தன்னிடம் கூறியதாக தென் ஆப்பிரிக்க கிரிக்கெட் வீரர் வியான் முல்டர் தெரிவித்துள்ளார்.





அண்மையில் ஜிம்பாப்வே அணிக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முதல் இன்னிங்ஸில் 367 ரன்களை வியான் முல்டர் எடுத்திருந்தார். இரண்டாம் நாள் ஆட்டத்தின் மதிய உணவு நேர பிரேக்குக்கு பிறகு தென் ஆப்பிரிக்க அணி டிக்ளேர் செய்தது. இதன் மூலம் லாராவின் 400 ரன் சாதனையை முறியடிக்காமல் முல்டர் தவிர்த்தார்.

சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட்டில் மேற்கு இந்தியத் தீவுகள் அணியின் பிரையன் லாரா விளாசிய 400 ரன்களே இதுவரை ஓர் இன்னிங்ஸில் விளாசப்பட்ட அதிகபட்ச ரன்களாக இருந்து வருகிறது. இந்த சாதனையை முறியடிக்க வியான் முல்டருக்கு ஜிம்பாப்வே உடனான போட்டியில் 34 ரன்களே தேவையாக இருந்தன. ஆனால் அவர், சாதனையை கருத்தில் கொள்ளாமல் டிக்ளேர் முடிவை அறிவித்து அனைவரையும் ஆச்சரியப்படுத்தினார். அது உலக அளவில் கிரிக்கெட் ஆர்வலர்கள் மத்தயில் பேசுபொருளானது. மேலும், ஜாம்பவான் லாராவுக்காக இந்த முடிவை எடுத்ததாக முல்டர் தெரிவித்தார்.

இந்நிலையில், வியான் முல்டர் உடன் லாரா பேசியுள்ளார். அந்த உரையாடல் என்ன என்பது குறித்து முல்டர் இப்போது பகிர்ந்துள்ளார். “நான் லாரா உடன் பேசி இருந்தேன். நான் என்னுடைய லெகசியை உருவாக்குகின்ற காரணத்தால் 400 ரன்னை நோக்கி ஆடியிருக்க வேண்டும் என சொன்னனார். சாதனைகள் முறியடிக்கப்பட வேண்டியவை என்றும் சொன்னார்.

அடுத்த முறை நான் அந்த நிலையில் இருந்தால் நிச்சயம் அதை எட்டுவதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டும் என சொன்னார். அது அவரது பார்வையில் இருந்து சுவாரஸ்யமானது. ஆனால், நான் சரியானதைத்தான் செய்தேன் என நம்புகிறேன். நான் நேசிக்கும் விளையாட்டுக்கு மதிப்பு கொடுக்க வேண்டியது முக்கியமானதாகும்” என்று தெரிவித்தார்.



## தமிழக வெற்றி கழக தலைவர் நடிகர் விஜய் பிறந்த நாளை முன்னிட்டு
# தூத்துக்குடி பூபல்ராயபுரத்தில் முன்னாள் மாமன்ற உறுப்பினர் ஆனந்தகுமார் தொழிலதிபர் கிஷோர் ஆகியோர் ஏற்பாட்டில் ரூ.8.லட்சம் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன

தூத்துக்குடி, ஜூலை.14-

தூத்துக்குடி தமிழக வெற்றி கழகம் சார்பில் தூத்துக்குடி முன்னாள் மாமன்ற உறுப்பினர் ஆனந்தகுமார் தொழிலதிபர் கிஷோர் ஆகியோர் ஏற்பாட்டில் தமிழக வெற்றிக்கழக தலைவர் விஜய் பிறந்த நாளை முன்னிட்டு 2000 பேருக்கு ரூ.8 லட்சம் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள் வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் முன்னாள் மாமன்ற உறுப்பினர் ஆனந்தகுமார் பேசுகையில் வருகின்ற 2026 இல் நடைபெறுகின்ற சட்டமன்ற பொது தேர்தலில் மக்களின் ஏகோபித்த ஆதரவின் காரணமாக தமிழக வெற்றிகழக தலைவர் எங்கள் பாசமிகு அண்ணன் நடிகர் விஜய் அவர்கள் மாபெரும் வெற்றி பெற்று தமிழகத்தின் முதலமைச்சர் ஆவார் இது உறுதி என்று நலத்திட்ட உதவிகள் வழங்கும் கூட்டத்தில் முன்னாள் மாமன்ற உறுப்பினர் ஆனந்தகுமார் சிறப்புரையாற்றினார்.

தமிழக வெற்றிக்கழக தலைவர் நடிகர் விஜய் பிறந்தநாளை முன்னிட்டு தூத்துக்குடி பூபல் ராயபுரம் மார்க்கெட் முன்பு தூத்துக்குடி மாநகராட்சி முன்னாள் மாமன்ற உறுப்பினர் ஆனந்தகுமார், தூத்துக்குடி பிரபல தொழில் அதிபரும் தமிழக வெற்றிக்கழக நிர்வாக முக்கிய பிரமுகருமான கிஷோர், ஆகியோர் ஏற்பாட்டில் ரூ.8.லட்சம் மதிப்பீட்டில் தையல் மிஷின்கள் உட்பட நலத் திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது,

இந்நிகழ்ச்சியில் தமிழக வெற்றிக்கழக தூத்துக்குடி மத்திய மாவட்ட நிர்வாகி எஸ்டிஆர் சாமுவேல் ராஜ், தூத்துக்குடி மாநகராட்சி முன்னாள் மாமன்ற உறுப்பினர் கோல்டன், வெற்றி கழக செய்தி தொடர்பாளர் சுபாகர், உட்பட ஏராளமானோர் விழாவில் கலந்து கொண்டனர்.

# விபத்துகளால் ரத்தாகும் சென்னை ரயில்கள்: சேலம் விருத்தாசலம் வழித்தடத்தை பயன்படுத்த வலுக்கும் கோரிக்கை

சேலம், ஜூலை.14-

ரயில் விபத்துகளின்போது சேலம் அரக்கோணம் சென்னை ரயில் தடத்தில் இயக்கப்படும் ரயில் ரத்து செய்யப்படுவதால், ரயில் பயணிகள் பாதிக்கப்படுவது தொடர் கதையாக இருக்கிறது. எனவே, சேலம் சென்னை இடையிலான 2வது ரயில் பாதையாக இருக்கும் சேலம் விருத்தாசலம் வழித்தடத்தை முழுமையாக பயன்படுத்த ரயில்வே நிர்வாகம் திட்டமிட வேண்டும் என்று ரயில்வே ஆர்வலர்களும், பயணிகளும் வலியுறுத்தி உள்ளனர்.



தெற்கு ரயில்வேயில், தமிழகம் மற்றும் கேரள மாநிலங்களில் பெரிதும் பயனடையும் வழித்தடங்களாக இருப்பது, சென்னை அரக்கோணம் சேலம் வழித்தடம் மற்றும் சென்னை விருத்தாசலம் வழித்தடம் ஆகியவையே. இதில், சென்னை அரக்கோணம் சேலம் ரயில்வே வழித்தடமானது, கேரள மாநிலத்தின் பல்வேறு நகரங்களை சென்னையுடன் இணைப்பதாக இருக்கிறது. இதேபோல், சென்னை விருத்தாசலம் ரயில்வே வழித்தடமானது, தென் மாவட்டங்களை சென்னையில் இணைக்கிறது.

இந்நிலையில், விருத்தாசலம் ரயில்வே ஜங்ஷனை சேலத்துடன் இணைக்கும் சேலம் விருத்தாசலம் ரயில்வே வழித் தடம், தெற்கு ரயில்வேயின் முக்கியத் துவம் இன்றி, பயணிகள் ரயில் மற்றும் சரக்கு ரயில் இயக்கத்துக்கு மட்டுமே அதிகமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது என்று ரயில்வே ஆர்வலர்கள் மற்றும் ரயில் பயணிகள் வேதனை தெரிவித்துள்ளனர். இதன் காரணமாக, சென்னை அரக்கோணம் சேலம் வழித்தடத்தில் ரயில் சேவை பாதிக்கப்படும்போது, ரயில் பயணிகள் பல ஆயிரம் பேர் பாதிக்கப்படுவது தொடர் கதையாக உள்ளது என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து அவர்கள் மேலும் கூறியதாவது: சென்னை அரக்கோணம் சேலம் வழியாக, இன்டர் சிட்டி, வந்தே பாரத், சதாப்தி உள்பட பல விரைவு ரயில்கள் அதிக எண்ணிக்கையில் இயக்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம் தினமும் பல ஆயிரம் பயணித்து வருகின்றனர். ஆனால், சென்னை அரக்கோணம் சேலம் ரயில் பாதையில் விபத்து, பராமரிப்பு போன்ற காரணங்களால், ரயில் சேவை நிறுத்தப்படும்போது, ரயில் பயணிகள் பெரிதும் பாதிக்கின்றனர்.

அதிலும், திடீரென பல ரயில்கள் ரத்து செய்யப்படும்போது, பயணிகளுக்கு பெரும் இடையூறு ஏற்படுகிறது. குறிப்பாக, நீதிமன்ற பணி, மருத்துவம், வியாபாரம் போன்றவற்று திட்டமிட்டு புறப்படுபவர்கள், ரயில்கள் திடீரென ரத்து செய்யப்படும்போது, தொலைதூரத்தில் இருந்து சென்னை வந்து செல்வதில் பெரிய பாதிப்பு ஏற்படுகிறது.

இந்தப் பிரச்சினைக்கு மாற்று ஏற்பாடாக, விருத்தாசலம் சேலம் வழித்தடத்தில் புதிய ரயில்கள் மற்றும் சிறப்பு ரயில்களை இயக்கினால், ரயில் பயணிகளுக்கு பாதிப்பு ஏற்படுவதைத் தடுக்க முடியும். சென்னை விருத்தாசலம் இடையே இரட்டை ரயில் பாதை உள்ளது.

விருத்தாசலம் சேலம் இடையே ஒற்றை வழித்தடமாக இருந்தாலும், இந்த வழித்தடத்தில் குறைந்த எண்ணிக்கையிலேயே ரயில்கள் இயக்கப்படுவதால், பெரிய சிக்கல் ஏதும் இல்லை. பெரும்பலான ரயில்கள் மின்சார இன்ஜினுடன் இயக்கப்படும் நிலையில், சேலம் விருத்தாசலம் வழித்தடம் மின்சாரமயமாக்கப்பட்டு, இருப்பது கூடுதல் வசதி. சேலம் விருத்தாசலம் வழித்தடத்தில் ஒவ்வொரு 3 ரயில் நிலையத்துக்கு நடுவில் உள்ள 2 வது ரயில் நிலையமும், ஒரே நேரத்தில் 2 ரயில்கள் நின்று செல்லக்கூடிய கிராசிங் ரயில் நிலையங்களாக இருப்பதால், ஒற்றை வழித்தடமாக இருந்தாலும், ரயில்களை பாதுகாப்பாக இயக்க வசதி உள்ளது.

இவ்வளவு வசதிகள் இருந்தும், சேலம் விருத்தாசலம் வழித்தடத்தில் சென்னை சேலம் இடையே பண்டிகை மற்றும் விடுமுறை கால சிறப்பு ரயில்கள் கூட இயக்கப்படுவதில்லை. ஆனால், ரயில் விபத்து காலங்களில் கூட, மாற்று வழித்தடமாக சேலம் விருத்தாசலம் ரயில் பாதையை பயன்படுத்த தெற்கு ரயில்வே நிர்வாகம் முன்வராமல் இருப்பது, ரயில் பயணிகளுக்கு பாதிப்பாகவே இருக்கிறது.

எனவே, சேலம் விருத்தாசலம் வழித்தடத்தில் சென்னை சேலம் வழியாக புதிய ரயில்களை இயக்கவும், பண்டிகை மற்றும் விடுமுறை கால சிறப்பு ரயில்களை இயக்கவும் தெற்கு ரயில்வே நடவடிக்கை எடுக்க வேண்டும். சேலம், கள்ளக்குறிச்சி, கடலூர் தொகுதி எம்பி.,க்கள், மாவட்டத்தில் உள்ள எம்எல்ஏ.,க்கள் இதற்கான ஆக்கப்பூர்வ நடவடிக்கையில் ஈடுபட வேண்டும் என்றனர்.



# திருப்பத்தூர் மாவட்டம் தமிழ்நாடு யாதவ மகா சபை சார்பில் முதல் இந்திய சுதந்திரப் போராட்ட மாவீரன் அழகுமுத்துக்கோன் 268 வது குருபூஜை விழா

திருப்பத்தூர், ஜூலை.14-

திருப்பத்தூர் மாவட்டம் தமிழ்நாடு யாதவ மகா சபை சார்பில் முதல் இந்திய சுதந்திரப் போராட்ட மாவீரன் அழகுமுத்துக்கோன் அவர்களின் 268 வது குருபூஜை விழா திருப்ப த்தூர் மாவட்ட தலைவர் எஸ்.எம். புவனேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

முன்னிலை மாவட்டப் பொருளாளர் எம் ஜெயக்குமார், மாநில பொதுக்குழு உறுப்பினர் ஆர்.வி. முருகன், ஆர் எஸ் வசந்த் ராஜ் வழக்கறிஞர் பிரிதிவிராஜ், மாதனூர் ஏழுமலை, நாச்சியார் குப்பம் பிரபாகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்

11.07. 2025 காலை 8 மணி அளவில் ஆம்பூர் புதிய பேருந்து நிலையம் இந்திரா காந்தி சிலை முன்பு முதல் சுதந்திரப் போராட்ட மாவீரன் அழகுமுத்துக்கோன் அவர்களின் 268 வது குருபூஜை விழாவில் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்த அஞ்சலி எலக்ட்ரானிக்ஸ் உரிமையாளர் எஸ். மாணிக்கம், வித்யா விகார் பள்ளி தலைவர் கே.குப்புசாமி மாலை அணிவித்து மரியாதை செலுத்தி இனிப்பு வழங்கினர்.

இவ்விழாவில் வேலூர் யாதவ மகா சபை தலைவர் லோகு யாதவ், பொருளாளர் பிரகாஷ் சின்னவரிக்கம் ஒன்றிய குழு தலைவர் நவீன், டி ராஜேந்திரன்,மாதனூர் ஒன்றியம் பாலகணேஷ் வடபுதுபட்டு மகேஷ் சான்றோர் குப்பம் நாகராஜ், சம்பத் மின்னூர் வெங்கடேஷ் யாதவ் விண்ணமங்கலம் முருகன், சதீஷ் யாதவ் மற்றும் நூற்றுக்கும் மேற்பட்ட யாதவ பெருமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்



# 14, 16 ம் தேதிகளில் பத்திரப்பதிவுக்கு கூடுதல் டோக்கன்கள்

சென்னை, ஜூலை.14-

ஜூலை 14, 16 தேதிகளில் பத்திரப்பதிவுக்கு கூடுதல் டோடக்கன்கள் வழங்கப்படவுள்ளன.

இதுகுறித்து பதிவுத்துறை தலைவர் தினேஷ் பொன்ராஜ்ஆலிவர் நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பு: தற்போது ஆனி மாதத்தில் வரும் மங்களகரமான நாட்களான ஜூலை 14 மற்றும் 16ம் தேதிகளில் அதிகளவில் பத்திரப்பதிவுகள் நிகழும் என்பதால், கூடுதல் முன்பதிவு டோக்கன்கள் ஒதுக்கும்படி பொதுமக்களிடம் இருந்து கோரிக்கைகள் வந்தன.

அதன் அடிப்படையில், இந்தத் தேதிகளில் ஒரு சார் பதிவாளர் உள்ள அலுவலகங்களுக்கு 100க்கு பதில் 150 டோக்கன்களும் 2 சார்பதிவாளர் உள்ள அலுவகங்களுக்கு 200க்கு பதில் 300 டோக்கன்களும் அதிகளவில் பத்திரப்பதிவு நடைபெறும் 100 அலுவலகங்களுக்கு 100க்கு பதில் 150 சாதாரண முன்பதிவு டோக்கன்களும் ஏற்கெனவே வழங்கப்படும் 12 தட்கல் முன்பதிவு டோக்கன்களுடன் கூடுதலாக 4 தட்கல் டோக்கன்களும் பொதுமக்கள் பயன்பாட்டுக்காக வழங்கப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



# மேற்கு தாம்பரத்தில் உள்ள ஸ்ரீ சாய்ராம் கல்லூரி நிறுவனதலைவர் லியோ முத்து அவர்களின் 10 ஆம் ஆண்டு நினைவு வேந்தல் நிகழ்ச்சி

தாம்பரம், ஜூலை.14-

செங்கல்பட்டு மாவட்டம் மேற்கு தாம்பரத்தில் உள்ள ஸ்ரீ சாய்ராம் பொறியியல் கல்லூரியில் ஸ்ரீ சாய்ராம் கல்லூரி நிறுவனதலைவர் லியோ முத்து அவர்களின் 10ஆம் ஆண்டு நினைவு வேந்தல் நிகழ்ச்சி மற்றும் உலக மனித கடமைகள் தின நிகழ்ச்சி ஸ்ரீ சாய்ராம் கல்வி குழுமத் தலைமை செயல் அதிகாரி சாய்பிரகாஷ் லியோ முத்து தலைமையில் 2025-2026 கல்வி ஆண்டிற்கான வேலை நாளை தொடங்கி வைத்து ஜீலை 10ஆம் தேதி கடமைகள் தினத்தில் வாழ்நாள் முழுவதும் மாணவர்களுக்காக வாழ்ந்த சாய்ராம் கல்லூரி நிறுவனர் லியோமுத்து அவர்களை ஒப்பிட்டு மாணவர்களிடையே உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்ட நாஸ்காம் இயக்குனர் உதயசங்கர் மற்றும் ஜே.சி.ஐ உலக தலைவர் கவின் குமாரவேல், கலந்து கொண்டு லியோ முத்து அவர்களின் பத்தாம் ஆண்டு நினைவேந்தல் நிகழச்சி முன்னிட்டு கல்வியாண்டின் முதல் நாளில் பி.ஜி.பி.ஏ என்ற செயலியை வெளியிட்டனர். இதனை தொடர்ந்து 300 க்கும் மேற்பட்ட ஆதரவற்ற பள்ளி குழந்தைகளுக்கு பேக் வழங்கபட்டது. இதில் ஸ்ரீ சாய்ராம் கல்வி குழும முதன்மை தகவல் அதிகாரி நரேஷ்ராஜ், முதல்வர்கள் முனைவர் ராஜா, முனைவர் பழனிகுமார், மேலாண்மை இயக்குநர் முனைவர் மாறன் மற்றும் புறத்தலைவர்கள், துறைதலைவர்கள், பேராசிரியர்கள் உட்பட 5000த்திற்கு மேற்பட்ட மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.




## தமிழகத்தில் விடுதி உரிமையாளர்களின் 8 ஆண்டு கோரிக்கையை ஏற்று
# தமிழக முதல்வர் விடுதிகளுக்கு ஒற்றை சாரார் முறையில் லைசென்ஸ் பெற முடியும் என அறிவிப்பு வெளியிட்டதற்கு நன்றி தெரிவித்து இனிப்புகள் வழங்கி கொண்டாடினர்

தாம்பரம், ஜூலை.14-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் வட்டாச்சியர் அலுவலகத்தில் தமிழ்நாடு ஐ.டி. விடுதி உரிமையாளர் சங்க தலைவர் சீதாராமன் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது, தமிழகத்தில் 1200 விடுதி உரிமையாளர்களும் சுமார் ஒரு கோடி பேர் விடுதியை சார்ந்து உள்ளதாகவும், எங்கள் விடுதி சங்கம் சார்பில் கடந்த 8 ஆண்டுகளாக பல்வேறு கோரிக்கை வைத்திருந்தோம். குறிப்பாக விடுதி உரிமம் பெறுவதை எளிதாக்கவேண்டும் என கோரிக்கை வைத்தோம் அதனை ஏற்று தற்போது தமிழக முதல்வர், ஒற்றை சாரார் முறையில் விடுதி உரிமம் பெறலாம் என அறிவிப்பு வெளியானது. விடுதி நடத்த லைசென்ஸ் வாங்க அலைகழிக்கப்பட்ட நிலையில் தற்போது தீர்வு ஏற்பட்டுள்ளததாக பெருமிதம் கொண்டார். இதனை கொண்டாடும் வகையில் விடுதி உரிமையாளர்கள் சங்கம் சார்பில் இனிப்பு வழங்கி கொண்டாட்டத்தில் ஈடுபட்டு தமிழக அரசுக்கு நன்றி தெரிவித்தனர்





# குறையாத வெயிலின் தாக்கம்: கொடைக்கானலில் குவிந்த சுற்றுலாப் பயணிகள்

திண்டுக்கல், ஜூலை.14-

தமிழகத்தின் பல்வேறு இடங்களில் வெயிலின் தாக்கம் அதிகரித்து காணப்படுவதால் வார விடுமுறை தினத்தில் கொடைக்கானலுக்கு சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரித்துள்ளது.

திண்டுக்கல் மாவட்டம் கொடைக் கானலுக்கு கோடை காலம் மட்டுமின்றி வார விடுமுறை தினங்களிலும் சுற்றுலாப் பயணிகள் வரத்து அதிகரித்து காணப்படுகிறது. இதற்கு தமிழகத்தின் பல்வேறு இடங்களில் வெயிலின் தாக்கம் அதிகரித்து காணப்படுவது தான் காரணம். இந்நிலையில் வார விடுமுறை தினங்களாக சனி, ஞாயிறு ஆகிய இரண்டு தினங்கள் கொடைக்கானலுக்கு சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரித்து காணப்படுகிறது. இபாஸ் முறையால் சிரமம் என்ற நிலை மாறி, தற்போது எளிதாக இ பாஸ் எடுத்து சுற்றுலாப் பயணிகள் வாகனங்களில் கொடைக்கானலுக்கு வந்து செல்கின்றனர். கடந்த இரு தினங்களாக கொடைக்கானலில் உள்ள சுற்றுலாத் தலங்களான குணா குகை, பைன் பாரஸ்ட், தூண் பாறை, மோயர் பாய்ண்ட், பசுமைப் பள்ளத்தாக்கு, ரோஸ் கார்டன், பிரையண்ட் பூங்கா பகுதிகளில் சுற்றுலாப் பயணிகள் அதிகம் காணப்பட்டனர்.

தமிழகம் மட்டுமின்றி கேரளா, ஆந்திரா, கர்நாடகா என வெளி மாநில சுற்றுலாப் பயணிகளும் அதிகம் வருகை தந்திருந்தனர். இதனால் சுற்றுலாத் தலங்களில் அதிக கூட்டம் காணப்பட்டது. நட்சத்திர வடிவிலான ஏரியில் படகு சவாரி செய்தும், ஏரியை சுற்றி சைக்கிள் ஓட்டியும், குதிரை சவாரி செய்தும் மகிழ்ந்தனர். நேற்று கொடைக் கானலில் அதிகபட்சமாக 27 டிகிரி செல்சியஸ் வெப்ப நிலை நிலவியது. குறைந்த பட்சமாக 19 டிகிரி செல்சியஸ் வெப்ப நிலை நிலவியது. அவ்வப்போது மேகமூட்டம் காணப்பட்டது. இரவு நேரத்தில் காற்றில் ஈரப்பதம் 90 சதவீதம் இருந்ததால் இதமான குளிர் காணப்பட்டது.

இதனால் பகலில் மிதமான வெப்பத்துடன் கூடிய இதமான குளிர்ந்த காலநிலை கொடைக் கானலில் நிலவியதை இயற்கை எழிலுடன் சேர்ந்து சுற்றுலாப் பயணிகள் உணர்ந்தனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161